வருகின்றன. ஆர்வமுள்ள தொழில் முனைவோர், இப்பகுதியில் தொழிற்சாலைகள் நிறுவ பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், ஈரோடு அவர்களை அணுகும்பட்சத்தில் அவர்களுக்குத் தகுந்தத் ஆலோசனை வழங்கி, ஊக்கம் அளித்து தொழில் துவங்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரசாணை எண் 41, தொழில் துறை, நாள் 19-3-1996-ன்படி, பவானிசாகர் வட்டாரம் தொழில்ரீதியாகப் பின்தங்கிய வட்டாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் அமையும் தொழில் நிறுவனங்களுக்கு நிலையான முதலீட்டில் 15 சதவிகிதம், அதிகபட்சமாக 15 இலட்சம் மானியமாக அரசுத் துறையின் மூலம் வழங்கப்படுகிறது. மேலும், தொழில் துவங்குகின்ற நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு மின்சார மானியம் முறையே 40%, 30%, 20% என்ற அளவிலே வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இத்துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்மூலம் ஊரகத் தொழில் வளர்ச்சிப் பணி நடைபெறுகிறது. இத்திட்டத்தின்கீழ் 8 ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற 18 முதல் 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் சுய தொழில் துவங்க பயிற்சி அளித்து, கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டு வருமானம் ரூபாய் 40,000-க்கு மிகாமல் இருக்க வேண்டுமென்ற அளவுகோலை நிர்ணயித்து, பெண்கள், உடல் ஊனமுற்றோர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், முன்னாள் படைவீரர் ஆகியோருக்கு 18 முதல் 45 வயது வரை பயிற்சி அளித்து, கடன் வழ்ங்கப்பட்டு தொழில் முனைவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துவருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 242, திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

242—

வீட்டுமனைப் பட்டா

***13921—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2002 ஏப்ரல் 26]

(அ) வெள்ளக்கோவில் தொகுதி, காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

என்போன்ற சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த கழகத் தொண்டனை அமைச்சராக்கி மக்களுக்காக உழைப்பு, நேர்மை, எளிமை என்கிற தாரக மந்திரத்தைச் சொல்லி வழிநடத்திச் செல்லும் எங்கள் கழகக் காவல் தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி எனது பதிலைத் தெரிவிக்கின்றேன்.

(அ) மற்றும் (ஆ) வெள்ளக்கோவில் தொகுதி, காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமம் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்திற்கான கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு.பெ. சாமிநாதன்.

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் வெள்ளக்கோவில் பேரூராட்சி இப்போது ஈரோடு மாவட்டத்தில் மிகப்பெரிய பேரூராட்சியாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கே, விசைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும், அதேபோல ஆயில் ஆலைகளில் பணிபுரியக்கூடிய தொழிலாளர்களும், நூற்பாலைகளிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களும் ஏராளமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு இன்னும் இலவச வீட்டுமனைப் பட்டா கிடைக்கவில்லை. மேலும், கடந்த கழக ஆட்சியில் 2 முறை வெள்ளக்கோவில் பேரூராட்சிப் பகுதியிலுள்ள சேனாதிபாளையம் வருவாய் கிராமத்தில் 2 இடங்களில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. அதிலே விடுபட்டுப்போனவர்களுக்குத்தான் இப்பொழுது கேட்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இலவச வீட்டுமனைப் பட்டா இல்லாத அப்பகுதி மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு மறுபரிசீலனை செய்யுமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பகுதிகளில் பயனாளிகள் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு ஏதுவாக அடிப்படை வசதிகளை அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கெனப் புதிதாக நிலம் கையகப்படுத்தும் திட்டம் இந்த நிதியாண்டில் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, காங்கேயம் வட்டம், வெள்ளக்கோவில் கிராமத்தில் வசிக்கும் பிற்படுத்தபட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 243, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

243—

ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகம்

***444—திரு. ப. ரங்கநாதன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அயன்புரம், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத் தலைமை மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை, அயன்புரத்தில் இயங்கும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை எனக் கூறிக் கொள்கிறேன்.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அயன்புரம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி காப்பீட்டுக் கழகத் தலைமை மருத்துவமனையை, 1962 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, வடசென்னை பகுதியிலே நிரம்ப